# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது


අංක 2271/24 – 2022 මාර්තු මස 15 වැනි අඟහරුවාදා – 2022.03.15

*2271/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 88 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/9/2021/BA/183.
பி. செய. கு. இல. : KES/DS/LND/AC/8/5/26.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப் பட்டுள்ள அட்டவணையின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ். எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர"
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, மாச்சு 14.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், கெஸ்பேவ.

2. **காணியின் விபரம்**: மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535A, பெல்லன்வில கிராம அலுவலர் பிரிவில், பெல்லந்தர (பொரலெஸ்கமுவ நகர சபை எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள, கொழும்பு மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் CO/KSB/2021/574 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - சதுருகஹகும்புர - விஸ்தீரணம் : 0.4123 ஹெக்டயார்**

வடக்கு: தெஹிவளை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத பெல்லன்வில ரஜமஹா விகாரை உரிமை கோரும் காணி மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத கதுருகஹகும்புர; கிழக்கு: உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத கதுருகஹகும்புர; தெற்கு: உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத கதுருகஹ கும்புர; மேற்கு: உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத கதுருகஹகும்புர, தெஹிவளை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத காணி, தெஹிவளை வீதியின் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை கோருபவர் கண்டுபிடிக்க முடியாத பெல்லன்வில ரஜமஹா விகாரை உரிமை கோரும் காணி.

EOG 03 - 0898




இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.